Registered as a newspaper in Ceylon.

# தொண்டன்

கத்தோலிக்க மாத ஏடு.

| மலர் 4 | மட்டக்களப்பு | தை – 1972 | விலை 30 | இதழ் 1 |
| --- | --- | --- | --- | --- |

# புனித தோமையாரின் 19வது நூற்றாண்டு விழாவை நாமும் கொண்டாடவேண்டும்.

அப்போஸ்தலரான புனித தோமையார் வேதசாட்சியாக மரித்ததின் 19வது நூற்றாண்டு விழா **1972ம் ஆண்டு முழுவதும் கொண்டாடப்படவேண்டும்** என்று இந்தியாவின் ஆயர்கள் விரும்பியுள்ளனர். சனவரி மாதம் சென்னையில் சிறப்பாகத் தொடங்கும் இக்கொண்டாட்டம் டிசம்பர் மாதம் கேரளத்தில் முடிவடையும்.

இந்நூற்றாண்டு விழாவின் நோக்கங்கள் வருமாறு:

1. அப்போஸ்தலரான புனித தோமையாரை இந்தியாவுக்கு அனுப்பியமைக்கு இறைவனுக்குச் சிறந்த முறையில் நன்றி செலுத்துதல்.
2. இறைவனின் நற்செய்தியை இந்தியாவில் எடுத்து விளம்பும் பணியை வளர்த்தல்.

இந்நோக்கங்களுக்கிசைய **''யாம் பெற்ற பெருவாழ்வைப் பிறருடன் பகிர்ந்து வாழ்வோம்''** என்ற விருதுவாக்கியம் இந்நூற்றாண்டு விழாவுக்குக் குறிக்கப்பட்டுள்ளது.

அப்போஸ்தலரான புனித தோமையார் இந்தியாவுக்கு மட்டும் உரியவரல்லர். இலங்கைக்கும் அவர் சொந்தமானவரே. அவர் இந்தியாவுக்கு வந்த காலத்தில், இன்று இருப்பது போல் இந்தியாவும் இலங்கையும் வெவ்வேறு நாடுகளாகப் பிரிந்து இருக்கவில்லை. அவர் இலங்கையையும் தரிசித்தார் என்பதற்கு நிச்சயமான சான்று இல்லாதிருப்பினும், அவர் கேரளத்திலிருந்து சோழ நாட்டிற்குச் சென்ற வழியில் இலங்கையையும் தரிசித்திருக்கக் கூடுமென்று எண்ணுவதற்கு இடமுண்டு. புனித தோமையார் இலங்கைக்கு வராதிருந்தாலும், தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் அக் காலத்தில் நெருங்கிய போக்குவரத்துத் தொடர்பு இருந்தமையால், அவரது நற்செய்திப் போதனையை இலங்கை மக்களுள் ஒருசிலர் என்றாலும் கேட்டிருப்பார்கள், அவரது வீரமரணத்தைப் பற்றியும் அறிந்திருப்பார்கள். ஆகவே, புனித தோமையாரை இந்தியாவின் அப்போஸ்தலராக மட்டுமல்ல, **இலங்கையின் அப்போஸ்தலராகவும்** நாம் கொள்ளுதல் மிகவும் பொருத்தமாகும். எனவே, இந்திய மக்கள் புனித தோமையாரின் 19வது நூற்றாண்டு விழாவை இவ்வாண்டு முழுவதிலும் கொண்டாடுவதுபோல, இலங்கை மக்களாகிய நாமும் பங்குகளிலும், மேற்றிராசனங்களிலும், முழுத் திருச்சபையிலும் இவ்விழாவைத் தகுந்த முறையில் கொண்டாட வேண்டும்.

"திருச்சட்டத்தை அழிக்கவல்ல... நிறைவேற்றவே வந்தேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவழிபாட்டுச் சிந்தனைகள்

## (துணை ஆயர்)

## (29) உறுதிப்பூசுதலின் வரலாறு.

கிறிஸ்துவின் அருள் வழியாக மாந்தர் இறைவனின் இயல்பில் பங்கு கொள்ளல் இயற்கை வாழ்வின் உற்பத்தி, வளர்ச்சி, போஷிப்பு ஆகியவற்றை ஒருவிதத்தில் ஒத்திருக்கின்றது. ஞானஸ்நானத்தினால் மனிதர் புதுப்பிறப்பை அடைகின்றனர்; உறுதிப்பூசுதலினால் புதுவாழ்வில் உறுதியடைகின்றனர்; தேவநற்கருணையில் நித்திய வாழ்வுக்குரிய உணவால் ஊட்டம் பெறுகின்றனர். இவ்வாறு கிறிஸ்தவ வாழ்வின் தொடக்கத் திருவருட் சாதனங்களால் மக்கள் தெய்வீக வாழ்வின் திரவியங்களை அதிகமதிகமாய்ப் பெற்று, இறையன்பின் நிறைவை நோக்கி முன்னேறிச் செல்கின்றனர். இவற்றைக் குறித்து தேர்த்துலியன் என்னும் பழையகால எழுத்தாளர் பின்வருமாறு எழுதியுள்ளார். ''உடல் கழுவப்படுகிறது. உள்ளம் சுத்தி அடையும் பொருட்டு; உடல் எண்ணெய்யால் பூசப்படுகிறது உள்ளம் திருநிலை அடையும் பொருட்டு; உடல் சிலுவை அடையாளத்தால் முத்திரிக்கப்படுகிறது உள்ளம் உறுதி பெறும் பொருட்டு; உடல்மேல் கைகள் விரிக்கப்படுகின்றன உள்ளம் பரிசுத்த ஆவியின் ஒளிபெறும் பொருட்டு உடல் கிறிஸ்துவின் உடலாலும் குருதியினாலும் ஊட்டப்படுகின்றது உள்ளம் இறைவனால் ஊட்டம் பெறும் பொருட்டு'' (இறந்தோரின் உத்தானம் பற்றி VIII, 3).

இயேசுநாதர் மெசியாவுக்குரிய தமது பணியைச் செய்வதற்கு பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் செய்யப்பெற்றார் என்பதைப் பரிசுத்த சுவிசேஷங்கள் தெளிவாகக் காட்டுகின்றன; ''ஆண்டவருடைய ஆவி என்மேலே, ஏனெனில் என்னை அபிஷேகம் செய்துள்ளார். எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், குருடர் பார்வை பெறுவர் என அறிவிக்கவும், ஒடுக்கப்பட்டோர்க்கு உரிமை வாழ்வு வழங்கவும் அவர் என்னை அனுப்பினார்'' (லூக். 4, 18–19)

தங்களைத் துன்புறுத்துவோர் முன்பும் தங்கள் விசுவாசத்திற்கு அச்சமின்றிச் சாட்சியம் கூறும்படி இயேசுநாதர் தமது சீடர்களுக்குப் பரிசுத்த ஆவியை வாக்களித்தார். இவ் ஆவி அவர்களோடு என்றும் தங்கியிருந்து, அவர்கள் தமக்குச் சாட்சியமளிக்கத் துணைபுரியும்படி அவரைப் பிதாவிடமிருந்து தாம் அனுப்பப்போவதாக தாம் பாடுபடுதற்குமுன் அவர்கட்கு உறுதிமொழி கூறினார் (அரு. 14, 16; 15, 25–26) ஈற்றில், கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தபின் ''இதோ! என் தந்தை வாக்களித்ததை நான் உங்களுக்கு அனுப்பப்போகிறேன். உன்னதத்திலிருந்து வரும் வல்லமையை நீங்கள் அணிந்து கொள்ளும்வரை நகரிலேயே தங்கியிருங்கள்'' (லூக். 24, 49); ''பரிசுத்த ஆவி உங்கள்மேல் வரும்போது அவரது வல்லமையைப் பெற்று யெருசலேமிலும், யூதேயா சமாரியா முழுவதிலும், மண்ணுலகின் இறுதி எல்லை வரைக்குமே நீங்கள் என் சாட்சிகளாயிருப்பீர்கள்'' (அ. ப. 1, 8) என்று அவர் கட்குக் கூறினார்.

அவ்வாறே பெந்தெக்கொஸ்தே திருவிழாவன்று ஒரே இடத்தில் கூடியிருந்த அப்போஸ்தலர்கள் ஒவ்வொருவர் மீதும் நெருப்புப்போன்ற நாவுகள் தங்க அவர்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பெற்று, ஆவியானவர் அருளியபடி கடவுளின் மாபெரும் செயல்களை அயல் நாட்டு மொழிகளிலும் எடுத்துரைத்தனர் (அ. ப. 2, 3–11). அப்போஸ்தலருடைய பிரசங்கத்தைக் கேட்டவர்களுள் 3000 பேர் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்று ''பரிசுத்த ஆவியாம் திருக்கொடையையும்'' (அ. ப. 2, 58) பெற்றுக்கொண்டனர். அந்நாளிலிருந்து அப்போஸ்தலர்கள் ஞானஸ்நானம் பெற்ற புதுக்கிறிஸ்தவர்கள் மீது தங்கள் கைகளை விரித்து பரிசுத்த ஆவியை அளித்து வந்தனர். (அ. ப. 8, 14–17; 19–6.) இதனிமித்தமே **எபிரேயருக்கு எழுதப்பெற்ற திருமுகம்** ''கழுவுதல் சடங்குகளையும், கைகளை விரித்தலையும் பற்றிய போதனையையும்'' (எபி. 6, 2) அடிப்

[13ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அப்போஸ்தலரான புனித தோமையார்

## (1) புனித தோமையாரைப்பற்றி விவிலியம் கூறுவதென்ன?

—அந்தனி ஜோண் அடிகள் - சென்னை.

குறிப்பு: புனித தோமையாரது இறப்பின் 19வது நூற்றுண்டு நிறைவு விழா இம்மதி சென்னை மாநகரில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படவிருந்தது ஆனுல் இப்போது பின்போடப்பட்டுள்ளது. —ஆசிரியர்.

புனித மத்தேயுவும், மாற்குவும், லூக்காசும் தோமையாரைப் பற்றி அதிகம் தகவல் நமக்குக் கொடுக்கவில்லை. அவருடைய பெயரை மட்டுமே குறிப்பிட்டுள்ளார்கள். புனித அருளப்பர் ஒருவரே இவர்களை விட புனித தோமையாரைப் பற்றி அதிகமாகக் கூறியுள்ளார். புனித அருளப்பர் தமது நற்செய்தி ஏட்டில் புனித தோமையார் லாசாரின் மரணத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறியதாகக் குறிப்பிடுகிறுர்:

திதிமு என்னும் தோமையார் உடன் சீடரிடம், ''நாமும் செல்வோம், அவரோடு இறப்போம்'' என்ருர். (அரு. 11:16)

இறுதி விருந்தின் போது, அண்ணல் இயேசு தம் சீடர்களை விட்டு விரைவில் பிரியப் போவதாகக் கூறிய போது, புனித தோமையார் இயேசுவைப் பார்த்து இவ்வாறு கேட்கிறுர்: ''ஆண்டவரே, நீர் செல்லும் இடமே எங்களுக்குத் தெரியாதிருக்க, அங்கே போகும் வழி எப்படித் தெரியும்? என்ருர். அப்பொழுது கிறிஸ்து கூறுகிறுர்.

''நானே வழியும் உண்மையும் உயிரும், என் வழியாயன்றி எவனும் பரம தந்தையிடம் வருவதில்லை. நீங்கள் என்னை அறிந்திருந்தால், என் தந்தையையும் அறிந்திருப்பீர்கள். இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தவர்களாயிருக்கிறீர்கள், அவரைக் கண்டும் இருக்கிறீர்கள்'' (அரு 14: 5–7)

உயிர்த்த இயேசு ஏனைய அப்போஸ்தலர்களுக்குக் காட்சியளித்தபோது, தோமையார் அவர்களோடு இருக்கவில்லை. ''நாங்கள் இயெசுவைக் கண்டோம், இயேசுவைக் கண்டோம்'' என அப்போஸ்தலர்கள் வீர முழக்கம் செய்த போதும் தோமையார் நம்பவில்லை. அவர் கூறினுர்:

''அவருடைய கைகளில் ஆணியால் உண்டான தழும்பைப் பார்த்து, ஆணிகள் இருந்த இடத்தில் என் விரலை விட்டு, அவர் விலாவில் என் கையை இட்டாலொழிய விசுவசிக்க மாட்டேன்'' என்ருர். (அருளப்பர். 20: 25). மரணத்தை வென்று வெற்றி வாகை சூடிய அண்ணல் இயேசு இந்தச் சந்தேகப் பிறவியின் ஐயத்தை நீக்கி, இவரைத் தனக்குச் சாட்சி பகர்ந்து, உயிரைக் கொடுக்கும் செம்மலாக மாற்ற முயன்ருர். எட்டு நாட்களுக்குப் பிறகு சீடர்களோடு தோமையாரும் இருந்தார். கதவுகள் மூடியிருக்க, இயேசு அவர்களிடையே நின்று ''உங்களுக்குச் சமாதானம்'' என்ருர்.

பின்பு தோமையாரை நோக்கி 'இங்கே உன் விரலையிடு; இதோ! என் கைகள். உன் கையை நீட்டி என் விலாவில் இடு! விசுவாசம் அற்றவனுயிராதே, விசுவாசம் கொள்'' என்ருர். கிறிஸ்து இவ்வாறு தன் விசுவாசக் குறைவைக் கடிந்து கூறியதும், சூரிய ஒளியைக் கண்ட பனி மறைவது போன்று, தோமையாரின் ஐயமும், விசுவாசக் குறையும் அகன்றன. தெளிவு பெற்ருர் தோமையார். கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையை உணர்ந்து விசுவாச அறிக்கையை முழங்கினுர்.

''என் ஆண்டவரே, என் கடவுளே'' என்ருர். இயேசுவோ,

[15ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் தமிழ்த் தொண்டு

குறிப்பு: இம்மதி 22ம் நாள் நல்லூர் சுவாமி ஞானப் பிரகாசர் இறைவனடி சேர்ந்து 25 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. அன்னாரின் நினைவாஞ்சலி யாக இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.
—ஆசிரியர்.

சுவாமியார் அவர்களுடைய தமிழ்த் தொண்டினை 3 பெரும் பகுதிகளாக வகுக்க லாம். அவை பேச்சுத் தொண்டு, எழுத்துத் தொண்டு, நூல்கள் என்பனவாகும். அவரு டைய பேச்சைக் கேட்கும் பாக்கியம் ஏராள மான தமிழ் மக்களுக்கு இருந்தபோதும், 1947ன் பின் பிறந்தவர்களுக்கு அந்தச் சுவை கிடையாது. ஒலிப்பதிவு செய்யும் வழக்கம் இல்லாத அக்காலத்தில் அவர் வாழ்ந்தார். அதனுல் நீங்கள் அவருடைய கனிவான மொழி யையும். சொல்லாற்றலையும் அறிய முடிய வில்லையே என வருத்தமடைகிறேம்.

அவருடைய எழுத்தைத் தாங்கிவராத ஈழநாட்டுத் தமிழ்ப் பத்திரிகைகள் இருக்க வில்லை. Daily News, Times of Ceylon பத் திரிகைகளிலும் தமிழாராய்ச்சி சம்பந்தமாய் எழுதிவந்தார். கோவைக்குருமார் தொண்டு புரிந்த ஒல்லாந்தர் காலத்தின் பின்னர் கத் தோலிக்க தமிழ் நூல்கள் மிக மிகக் குறை வாகவே இருந்தன. அந்தப் பெரிய இடை வெளியை நிரப்பிவைத்தமை சுவாமியவர் களுக்கே உரியது. ''துன்பங்களும் இடையூறு களும் நிரம்பிய குருபதவியிலிருந்து தமிழ்த் தொண்டு புரிவது சாத்தியமான கருமமன்று'' என அவரே எழுதியுள்ளார். அப்படியிருக்க வும் பழைய நூல்கள் பலவற்றைப் பதிப்பித் தும், பல நூல்களை மொழி பெயர்த்தும் மடுத் தர்க்கப் பிரசங்க வெளியீடுகளை முறை யாய் வெளியிட்டும், வேததர்க்க துண்டுப் புத்தகங்களை எழுதியும் மகத்தான தொண்டு செய்தார். மடுவிலே ஆயிரக்கணக்காய்க் கூடும் மக்களில் அநந்தம் பேர் இந்துக்களா யிருந்தனர். மடுமாதாவை அவர்கள் அம்மன் என வழிபட்டார்கள். அவ்வேளையில் வண. மரு சலீன் சுவாமியவர்கள் தபிரா மன்னன்போல் ஒரு பக்கத்தில் நின்று கேள்விகள் கேட்க, ஞானப்பிரகாசர் மறுமொழி கூற அக்காட்சி பரமானந்தமாயிருக்கும். இதன் பின்னர் நூல் கள் வெளி வந்ததும் இவ்வாருன தர்க்கப் பிரசங்கத்தை வேறு குருமார் மடுவில் மேற் கொண்டதோடு, பிற ஊர்களிலும் விழாக் காலங்களில் தர்க்கப்பிரசங்கம் வைப்பது வழக் கமாயிருந்தது.

மேலும் இந்துக்களிடத்தில் காணப் படும் தப்பறைகள் பலவற்றை நிதானமாக ஆராய்ந்த சுவாமியவர்கள் 22 தர்க்கத் துண் டுப் புத்தகங்களை வெளியிட்டார். இவற்றுல் இந்துக்களிடையே அவர் தூற்றப்பட்டாலும், முன்னின்று அவரை வெற்றிகண்டார் எவரு மில்லை. மறுபிறப்பைப் பற்றி இந்துக்கள் கொள்கையை அவர் கண்டித்தபோது நாட் டிலே ஒரு பரபரப்புத் தோன்றிற்று. மறுபிறப் புக் கொள்கை தோன்றியது இடைக்காலத்தி லென்றும், பூர்வ வேதங்களில் அதையிட்டு குறிப்புகள் ஏதும் இல்லையென்றும் பல ஆணித்தரமான நியாயங்களைக் காட்டினர். இந்து சாதனப் பத்திரிகையில் தோன்றிய எதிர்ப்புகளுக்குச் சுவாமி கொடுத்த பதிலின் பின் அவை மறைந்தன.

## வித்துவான் S. அடைக்கலமுத்து
இளவாலை.

### சொல்லாராய்ச்சி

தொல்காப்பியம் என்னும் தமிழ் இலக் கண நூல் தமிழில் நாம் காணும் நூல்களி

[5ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நல்லூர் சுவாமி ஞானப்...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

லெல்லாம் மிகவும் பழையதாகும். அதில் ''**மொழிப் பொருள் காரணம் விழிப்பத் தோன்ரு**''. இதற்கு சொல்லின் பொருள் படைத்தோன் கருத்தாலும், சம்பந்த ஆற்ற லாலும் புலப்படும் எனப் பொருள் கூறப் படுகிறது. பிறிதோரிடத்தில் ''எல்லாச் சொல் லும் பொருள் குறித்தனவே'' அதாவது தமிழ்ச் சொற்கள் எல்லாம் பொருளை உடை யன எனக் கூறப்படுகிறது. பிற்காலத்தில் சொற்களை இடுகுறிப் பெயர், காரணப் பெயர், என நூலாசிரியர்கள் பிரித்து பொருள் தெரி யாதனவற்றை இடுகுறியென அமைத்தனர். ஒரு நாள் ஞானப்பிரகாசர் பெருங்களையோடு வந்து ஒருநாற் காலியில் படுத்துக்கொண்டு திரு. கு. வே. கதிரவேற்பிள்ளை எழுதிய அக ராதி ஒற்றைகளைப் புரட்டிக் கொண்டு போஞர். அவருடைய உள்ளத்தில் ஒரு உண்மை புலஞயிற்று. நமது தமிழ் மொழி யிற் கிளை கிளையாய்ப் பரந்து பன்னூற்றுக் கணக்கில் கிடக்கும் சொற்களெல்லாம் ஒரு சிறங்கையளவு சொற்கூட்டத்திலிருந்து தான் கிளைத்து எழுந்தன என்பதுதான் அவர் கண்ட உண்மையாகும். அன்று தொடக்கம் பல ஆண்டுகளாக இம்முயற்சியிலீடுபட்டார். இலங்கை வித்தியா சமாச்சாரப் பத்திரிகை (Ceylon Educational Gazette) யில் ''சொற் பிதிர் வழி'' எனத் தொடர்பான கட்டுரை களை 1928ல் எழுதிவந்தார். பின்னர் **தமி ழமைப்புற்ற வரலாறு** என்னும் நூலை ஆக்கி ஞர். பன்னூற்றுக்கணக்கான சொற்கள் ஒத்த இனங்கொண்ட கூட்டங் கூட்டமாய் வருதலையும் அவற்றில் குடும்பச் சாயல் போன்ற ஒற்றுமை இருப்பதையும் வெளிப் படுத்தினர். சுவாமியாருடைய ஆராய்ச்சிக் கடலுள் கால் வையாமல் கரையில் நின்றே ஒரு காட்சியைப் பார்ப்போம். 'உள்' என்னும் ஒரு அடியிலிருந்து

உழு, உளி, உலை, உளை,
உழ, உழல், உளர், சுழல்
உழறு, குழறு, உழற்று, சுழற்று
உலவு, சுலவு, சில்லு, சுற்று
துலவு, துழாவு, துருவு, துளை என ஒரு தொகைச் சொற்கள் தோன்றுகின்றன.

உழு: நிலத்துள் கொழுவைச் செலுத்தல்
உளி: உட்பாகத்தைத் தோண்டுதல்
உலைதல்: உள் நின்று வெளியேறல்
உளைதல்: உள் வீழ்ந்து அழிதல்
உழத்தல்: உள்ளும் புறமும் மாறிவரல்
உளர்தல்: உள்ளே கையைச் செலுத்தி ஆற்றுதல்
சுழல்: உள்ளும் புறமும் மாறிமாறி வருதல்
சுலவு: சுழலுதலின் மறு உருவம்
துழாவு: உள்ளே ஆராய்தல்
துருவுதல்: ,, ,,

இச்சொற்களுக்கு **கலித்தொகை, புறநா னூறு**, அகநானூறு, பத்துப்பாட்டு, என்னும் இலக்கியங்களில்ஆதாரம் காட்டப்படுகின்றது சுட்டெழுத்துக்களாகிய அ.இ.உ.எ. என்பவற் றிலிருந்து இடம் பற்றியும் தொழில் பற்றியும் சொல்விருத்தி ஏற்பட்ட விதத்தை வாசித் தால் நமக்கு மாயாசாலம் (Technics) நிரம் பிய படத்திரையின் முன் நிற்பதுபோலத் தோன்றுகிறது. கிட்டடியைக் குறிக்கும் அய என்ற சொல் அயல் என்ருகி, அகல் என (அயலை நாடிச்செல் எனும் பொருள்) வந்து, அகட்டுதல், அகற்றுதல் என விரிவடைந்து விசாலம் எனப் பொருள் பெற்று அகலத்தை யும், ஆல் என விசாலமான மரத்தையும், சால் எனப் பெரிய சட்டியையும், அகன்ற நோக்குடைய ஆன்ருேருக்கும் வந்தமை காண லாம். இவை போன்ற பல மூல மந்திரங்களைத் தமிழமைப்புற்ற வரலாறு எமக்குப் புலப் படுத்துகிறது.

பல ஆண்டுகள் அவர் செய்த அரும் பெரும் ஆராய்ச்சியின் சாதனையாக **சொற் பிறப்பு ஒப்பியல் அகராதி தோன்றியது. உலக மொழிகள் எல்லாம்** ஒரு தாய் மொழி **யின் உதரத்தில் உதித்தவை** என்ற கருத்தை உள் கிடக்கையாய்க் கொண்டு இந்நூல் எழு தப்பட்டது. சிலாப மேற்றிராணியார் கூறு வது போல ''இந்நூலை முடிக்க யாராவது இருப்பார்களா அல்லது பிறப்பார்களா?'' என்பது சந்தேகந்தான். இதுகால வரையில் தமிழ் அகராதி செய்தவர்கள் பழந்தமிழ் அடிச்சொற்களையோ, அவற்றின் வழி வழி மாற்றங்களையோ அவதானித்ததில்லை. பெருஞ் சொற்பரப்புக்களை எடுத்து உலக வழக்கோடு ஒப்பிட்டுக் கருத்தை எழுதிப் போந்தனர். சுவாமியவர்கள் ஒப்பியல் அக ராதியில் தமிழ்த் தாதுக்கள் ஆகிய அடிச் சொற்கள் கிளைக்கும் விதத்தைக் காட்டும் போது மனனம் செய்யவும் பொருளறியவும் இது பெரும் துணைபுரிவதாகும். பலவருடங்க ளாகத் தமிழ், ஆரியத்திலிருந்து தோன்றியது என்ற கருத்துத் தமிழ் நாட்டிலிருந்தது. **கால்ட்வெல் அவர்கள் இதனை ஆதார பூர்வ மாக மறுத்தார்**. தமிழ் வேற்று மொழியின் துணையின்றியே இயங்கக் கூடியது என்பதை

[6ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நல்லூர் சுவாமி ஞானப்...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

அவர் ஒப்பியல் இலக்கணத்தில் எழுதியுள்ளார். சொல்லமைப்பு முறைகளையிட்டு, மேனுட்டு அறிஞர்கள் எழுதிய பல நூல்களை சுவாமியவர்கள் வாசித்தனர். தமிழ் அடிச் சொற்களின் உண்மை உருவங்களையும் கருத்துக்களையும் பழந்தமிழ் நூல்களில் கண்டு கொண்டார். அந் நாட்களில் Dr. கிட்டல் 'வடமொழியில்திராவிடக்கூறுகள்' என்றெரு நூலை வெளியிட்டார். (Dravidian Elements in Sanskrit) இவற்றை ஆராய்ந்த போது திராவிட மொழியும் ஆரியமும் தொடர்பு கொண்ட வரலாற்றை ஆராய்ந்தார். இந்த ஆராய்ச்சியிலீடுபட்டிருக்கும் போதுதான் இந்திய புதைபொருள் ஆராய்ச்சிச் சங்கத் தலைவர் சுவாமி **ஹெரஸ்** என்பாரின் நற்றுணை கிடைத்தது. மொழி – சொல் – இதிகாசம் என்பவற்றை ஆராய்வாருக் கெல்லாம் உற்ற துணையாயிருக்கும் எபிரேய ஆகமங்கள் சுவாமியாருக்கும் பேராதரவளித்தன.

எபிரேய பாஷை எழுத்துக்களையும், செமிற்றிக் மொழிகளையும் அவர் வாசிக்க அறிந்து கொண்டார். உலகின் ஆதிகாலச் சம்பவங்களை உள்ளது உள்ளபடியே கூறும் எபிரேய ஆகமங்கள் வழியாக பண்டைக் கால அரசர் பெயர், ஊர்ப் பெயர், யுத்த வரலாறு, மக்களின் இடப் பெயர்கள் பழக்க வழக்கங்கள், மனிதன் மறைவு என்பன பற்றி அறியக்கூடியதாயிற்று. எபிரேய பாஷை சுமேரிய மொழியிலிருந்து தோன்றி வளர்ந்த தென்பதையும், சுமேரியரின் ஆதிப் பாஷைக்கும் தமிழுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதையும் சுவாமியார் கண்டதின் பின்னர் ''சுமேரியரும் தமிழரும்'' எனப்பல கட்டுரைகளை எழுதியுள்ளார். எகிப்திய கல்லறைகளிலும், பிரமிட்டுகளிலும் அலங்கார மண்டபங்களிலும் காணப்படும் சாசனங்களில் சுமேரிய மொழியின் மூலங்கள் இருப்பதையறிந்தார். உலக மொழிக்கெல்லாம் ஒருமொழியின் உற்பத்திச் சாதனங்களாகும் என அவர் முடிவு கட்டினுர். (ஆதியாகமம் 9, 6–7) ஹெரஸ் சுவாமி அவர்கள் கொண்டு வந்த ஒரு சிந்துநதிக்கல் வெட்டில் ''வானத்தேறு ஒரு மீன்கண் வாழ்'' என இருப்பதாகச் சுவாமியார் கூறினுர், சுவிர்ச்சலாந்தில் வெளியாகும் Anthropos என்னும் மனித வரலாறுப் பத்திரிகையில் தமிழின் தொன்மை பற்றி அடிக்கடி எழுதி உலக அறிஞரின் பாராட்டுகளைப்பெற்றுர். இவற்றின் முடிவாக எழுந்ததே ஒப்பியல் அகராதியாகும். அஃக என்ற சொல்லில் இருந்து 228 தமிழ்ச் சொற்கள் தோன்றியுள்ளன என்று சுவாமியார் குறித்தார். ஒவ்வொரு சொல்லுக்கும் ஆங்கில உச்சரிப்பும் பெயரடியாகவும் வினையடியாகவும் அச்சொல் அடைந்த மாற்றங்களும் குறிப்பிடப்படுகின்றன. பிற பாஷையில் இச்சொல் அமைந்திருப்பதையும் ஆங்காங்கு குறிப்பிட்டுள்ளார்.

தமிழில் தலை என்பது சிரசைக் குறிக்கும். இது கன்னடத்தில் தலெ என்றும், தெலுங்கில் தல, என்றும் மலையாளத்தில் தல என்றும் இவ்வாறு திராவிட மொழிகளில் ஏற்படும் விகற்பங்களும், பிசின் என்பது லத்தீனில் Pix என்றும், கிரேக்கத்தில் Pissa என்று வேறுபட்டு நிற்பதும் இவ்வாறு சொற்களின் ஆராய்வும் தெரிகிறது. 198 பிற பாஷை நூல்களில் எடுத்துக் காட்டுகள் (Examples) வருகின்றன. இதனுல் பிறநாட்டாரும் தமிழின் பண்பாட்டையும் புராதன இலக்கிய அமைப்பையும் ஒரு சிறிதாவது மட்டிடக் கூடியதாயிற்று.

**தமிழரின் ஆதியிருப்பிடமும் பழஞ்சீர் திருத்தமும்** என்ற நூல் கையால் எழுதப்பட்டு இன்னும் அச்சேருத நிலையில் உள்ளது. இங்ஙனமாகச் சுவாமியார் அவர்கள் தமிழன்னைக்குச் சிறந்த சேவையாற்றிய பெரியோர் வரிசையில் இடம் பெற்றிருப்பது போற்றப்படத் தக்கதாகும். ✠

## நீயதற்கீடில்லையே!

(உள்ளம் என்றெரு கோவிலிலே எ. மெ.)

ஏதென் என்றெரு தோட்டத்திலே
ஏவாள் இழந்தாள் உன் அருளை
எடுத்தாள் அதனை கன்னிமரி
எமக்கே அளித்தாள், அன்பே வா! அன்பே வா!
வா! வா!
வாழ்ந்திடவோ வகையது தெரியவில்லை
வளர்ந்திடவோ உறவது கிடைக்கவில்லை
வாடுகின்றேம் மடியவில்லை
தேடுகின்றேம் அடையவில்லை
வந்திடு பாலகனே!
ஆயிரம் தான் வாழ்வில் வரும்
நீயதற்கீடில்லையே! [ஏதென்[

நீயிருந்தால் எம் வாழ்க்கையில் கருத்திருக்கும்
நிழல் கொடுத்தால் கருத்ததில் செயல் பிறக்கும்
செயல் பிறந்தால் சீர் பெறுவோம்
சீரடைந்தால் நீ வளர்வாய்
வந்திடு பாலகனே!
ஆயிரம் தான் வாழ்வில் வரும்
நீயதற்கீடில்லையே! [ஏதென்]

—எம். றெஜினல்டா ஏ. சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 'கத்தோலிக்க விசுவாசத்தின்' கருத்து என்ன?

மாற்றங்கள் மலிந்து கிடக்கும் இன்றைய உலகில் நம் விசுவாசத்தைப் பாதுகாத்து, உறுதிப்படுத்தி, வாழ்வில் கடைப்பிடித்து, பிறர் மத்தியில் பரப்புதல் நம் தலையாய கடமை என்று சென்ற கார்த்திகைத் திங்கள் 6ந் திகதி கல்முனையில் நடந்தேறிய தி. ம. மேற்றிராசன ஐக்கிய சங்கத்தின் மகாநாட்டில் மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. இதை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்குரிய தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. இத்தொடர்பில் 'கத்தோலிக்க விசுவாசத்தின் கருத்து என்ன?' என்ற கேள்வியைச் சிலர் கேட்டுள்ளனர். ஆகவே இதைச் சற்று ஆராய்தல் நன்றாகும்.

'விசுவாசம்' என்னும் பதம் இரு கருத்துகளில் பயன்படுத்தப்படுகிறது. முதலில் 'விசுவாசம்' இறைவனின் வெளிப்படுத்தலை ஏற்றுக் கொள்ளும் மனித உள்ளத்தின் செயலைக் குறிக்கின்றது.

வார்த்தையானவர் வழியாக எல்லாப் பொருள்களையும் படைத்துக் காத்து வரும் இறைவன், படைப்புகளின் வழியே தம்மைப் பற்றிய நீடித்த ஒரு சான்றினை மனிதனுக்கு அளித்திருக்கின்றார். விண்ணக மீட்பின் வழியைத் திறக்க எண்ணி, இன்னும் ஒரு படி மேலே சென்று, ஆரம்பத்திலிருந்தே தம்மையும் தமது திருவுளத்தின் மறைத்திட்டத்தையும் நம் முதற் பெற்றோருக்கு வெளிப்படுத்தினார். அவர்களது பாவத்திற்குப் பின் ஒரு மீட்பரை வாக்களித்து, அதன் மூலம் அவர்களை நம்பிக்கையில் நிலைநிறுத்தினார். அவர் குறித்திருந்த காலத்தில் எபிரேயர் குல முதுவர் வழியாகவும் அவர்களுக்குப் பின் மோயீசன் இறைவாக்கினர் வழியாகவும், தம்மை உயிருள்ள ஒரே உண்மைக் கடவுள், பராமரிக்கும் தந்தை, நீதி நிறை நடுவர் எனத் தம் மக்கள் ஏற்றுக் கொள்ளவும், தாம் வாக்களித்த மீட்பருக்காகக் காத்திருக்கவும் அவர்கட்குக் கற்பித்தார். இவ்வாறு பற்பல முறையிலும் பல்வேறு வழிகளிலும் இறைவாக்கினர் வழியாகப் பேசிய பின், இறைவன் கடைசியாய் தம் மகனின் வாயிலாகவே நம்மிடம் பேசியுள்ளார் (எபி. 1, 1–2). எல்லா மக்களுக்கும் ஒளியளிக்கும் தம் மகனாகிய நித்திய வார்த்தையானவரை, மக்களிடையே வாழ்ந்து, இறைவனின் உள்ளார்ந்த உண்மைகளைக் கூறும்படி அவர் அனுப்பி வைத்தார். ஆகவே, மனுவுருவெடுத்த வார்த்தையானவரும், மனிதருக்காக மனிதனாக அனுப்பப்பட்டவருமான இயேசு கிறிஸ்து கடவுளின் வார்த்தைகளைப் பேசினார். தந்தை அவருக்களித்த மீட்புப் பணியை நிறைவேற்றினார். இயேசுவைக் காண்பது அவரின் தந்தையைக் காண்பதற்குச் சமனாகும் (அரு. 14, 9). இக்காரணத்தினால்தான், இயேசு தம்மைக் காண்பித்ததினாலும் வெளிப்படுத்தியதினாலும், தம் சொல், செயல், அருங்குறிகள், புதுமைகள், குறிப்பாகத் தம் இறப்பு, மாட்சிமிகு உயிர்ப்பு, விண்ணேற்றம், உண்மையின் ஆவியானவரை அனுப்புதல் ஆகியவற்றினால் இறை வெளிப்பாட்டை நிறைவு செய்து முழுமைப்படுத்தினார். (காண்: இறைவெளிப்பாடு இ. 3–4).

தம்மையே வெளிப்படுத்தும் இறைவனுக்கு மனிதன் தன் புத்தியோடும் சித்தத்தோடும் முழுமையாய்ப் பணியவேண்டும். அவர் வெளிப்படுத்திய உண்மைகளைத் தன்னுரிமையோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர் வெளிப்படுத்திய சட்ட திட்டங்களை ஏற்று அவருக்குப் பதில் அன்பு காட்டவேண்டும். இவ்வாறு, தம்மை வெளிப்படுத்தும் இறைவனுக்கு மனிதன் தன்னை முழுவதும் தன்னுரிமையுடன் கையளிக்கின்றான். இக் கையளித்தல் விசுவாசத்தை மட்டுமல்ல, அன்பையும் நம்பிக்கையையுமே அடக்கியுள்ளது.

இறைவன் வெளிப்படுத்திய மறை உண்மைகளை அவரது வாய்மையினிமித்தம் தத்தளிப்பின்றி ஏற்றுக்கொள்வதே விசுவாசமாகும். இவ்விசுவாசத்தின் மையப் பொருள், **மீட்பராகிய கிறிஸ்து இறைவனின் திருமகன்** என்பதாகும்: ''நீர் மெசியா, உயிருள்ள கடவுளின் மகன்'' (மத். 16, 16).

[15ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தொடர்கதை

# தேவ நீதி (3)

"ஜெயம்"

இரவு நெடுநேரத்திற்குப் பின் நீண்ட பெரிய 'ஹம்பர்' கார் அந்த வீட்டைநோக்கி வந்து ஆடி அசைந்து நின்றது. தேர் போன்ற அந்தக் காரிலிருந்து இறங்கிய தாசன், சுற்று முற்றும் ஒருமுறை பார்த்துவிட்டு, உள்ளே படியேறி மாடியை அடைந்தான். இரவின் பேய் அமைதியில் ஆழ்ந்திருந்த அந்த மாளிகையில் வாழும் இதயங்கள் அமைதியின்றித் தவித்துக்கொண்டிருந்தன. இந்த மனிதர்களின் மனநிலைக்கேற்ப இயற்கையன்னையும் மழை பொழிந்துகொண்டிருந்தாள். தாசன் வழமையாக வீட்டுக்குவர நேரமாகி விடுவதால் குழந்தைகள் உறங்கிவிடும்; லில்லி மட்டும் தனியே விழித்திருப்பாள். ஆனால், அவளையும் ''தனக்காகக் காத்திருக்கக்கூடாது'' என்று வற்புறுத்தி விடவே, அவளும் மனச் சோர்வுடன் தூங்குவதே வழக்கம். ஆனால், அன்று அவள் ஆழ்ந்த சிந்தனையிலிருக்கக் கண்ட தாசன் ஆச்சரியப்பட்டுவிட்டான். பிற்பகல் நடந்த அமளியினால் குழம்பிவிட்டாள் போலிருக்கிறது, ஏதாவது கேட்டால் சரியான சாட்டுச் சொல்லி தப்பித்துக் கொள்ளவேண்டும் என்று நினைத்துக்கொண்டான். நாற்காலியிலமர்ந்து பத்திரிகை படிப்பதுபோல பாசாங்கு செய்துகொண்டே அவளைக் கவனித்தான். லில்லியின் மனம் கடல் அலையெனக் குமுறிற்று, ''சொல்லுவதா, விடுவதா, ....சேச்சே .... வேண்டாம். இதை விட்டால் சந்தர்ப்பம் கிடைக்குமா?.... நாளை இவர் இப்படி சாவகாசமாக இருப்பாரா.... சொல்லிவிடுவோம்.... ஏதாவது விபரீதமாக நடந்துவிட்டால்.... ஐய்யய்யோ! வேண்டாம்? வேறு என்னதான் செய்வது.... அண்ணனிடமும் உறுதியளித்துவிட்டேன்.... அப்படி ஏதும் நடக்காது.... அண்ணன் விடமாட்டார்....'' இப்படியாக குழம்பிக்கொண்டிருந்தாள். விளக்கு வெளிச்சம் அவள் முகத்தில் பட, அதில் பல பாவங்களும் மாறிமாறி வானவில்லின் வர்ண ஜாலம் காட்டிற்று. இந்த மௌன நாடகம் குற்றமுள்ள நெஞ்சுக்கு முன்னில் இருப்பதுபோலிருக்க, அதை நீடிக்க விடாமல் ''லில்லி ஏன் ஒருமாதிரியாக இருக்கிறாய்.... சுகமில்லையா?'' என்றான். அவள் தனது கொதிப்பை அடக்கமுடியாமல் ''அத்தான்....'' என்றாள். பின்னேரம் அந்தப்பெண் வந்து சத்தம் போட்டதைப் பற்றித்தான் ஏதோ கேட்கத் துடிக்கிறாள் என்ற எண்ணத்தில் ''லில்லி, அவள் ஏதோ பேசிவிட்டுப் போகிறாள் என்பதற்காக நீ கவலைப்படுகிறாய்! அவளைப்பற்றி இந்த ஊருக்கே தெரியும், அவளது தொழில் அதுதான். பணம் படைத்தவர்களிடம் பறிக்கும் நோக்கம். உண்மையிலேயே மானம் மரியாதைக்குப் பயந்தவளானால், பணத்தைக் கண்டதும் பல்லிளிப்பாளா? சமூகத்தில் பெரிய மனிதர் என்கின்ற நிலையில் இருந்தால் இப்படியான சந்தர்ப்பங்களும் ஏற்படுவது சகஜம்'' என்றான் தாசன். இதைக் கேட்டதும் அவளுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டுவந்தது. ஏதாவது பேசுவாள் என்று எதிர்பார்த்த தாசனுக்கு அவளது அழுகை எரிச்சலூட்டியது. ''நடந்தது நடந்துவிட்டது; இன்னும் அதையிட்டு அழுதுகொண்டிருந்தால் ஆவதென்ன? சற்று அமைதியாய் இருக்க வீட்டுக்கு வந்தால், இங்கு வேதனை தான் இருக்கிறது'' என்றான் கோபமாக. அவர்கள் அழுவதும், சண்டை பிடிப்பதும் இது முதல் முறையல்ல. அடிக்கடி நடக்கும் ஒரு நிகழ்ச்சிதான். ஆனாலும் லில்லியின் இன்றைய மனநிலையில் அவன் பேச்சு மனதை உறுத்திற்று. ''அத்தான்.... நீங்க தேடும் அமைதி இந்த வீட்டில் கிடைக்கவில்லையா? அதற்கு நான் தடையாக இருக்கிறேனா? இம்.... நீங்க பட்டும் படாமல் நடந்துகொள்வதால், அந்த அமைதியைத் தெரிந்துகொள்ளவில்லை. குடும்பம், குழந்தை என்று புரிந்து கொண்டாலல்லவா அதிலுள்ள சுகத்தை அறிவதற்கு. அப்படிப் புரிந்துகொண்டால் இங்கு நான் படும் வேதனையும் தெரியும்'' என்று நிறுத்தினாள். ''நீ என்ன வேதனைப் படுகிறாய்? இங்கு உனக்கு என்ன குறை? உனக்கு சகல வசதிகளும் அளித்திருக்கிறேனே'' என்றான் தாசன் கோபம் மாறாமல். ''ஆமாம், வசதியளித்திருக்கிறீங்க.... எப்படியான வசதியளித்திருக்கிறீங்க என்று சிந்தித்துப் பாருங்க! கௌரவமான குடும்பத்தைப் பற்றி மற்றவர் கேவலமாகப் பேச வசதியளித்திருக்கிறீங்க. வெளியே தலைகாட்டாமலிருக்க வசதியளித்திருக்கிறீங்க.... ஏன்.... என்னையும் நடத்தை கெட்டவள் என்று பேசவும், பார்க்கவும், எள்ளிநகையாடவும் வசதியளித்திருக்கிறீங்க போதுமா? என்றாள்

[9ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தேவநீதி...

[8ம் பக்கத் தொடர்ச்சி]

அவளும் கோபமாக. துள்ளியெழுந்த தாசன் ''என்ன....! உன்னைக் கேவலமாகப் பேசினுங்களா? யார் அப்படிச் சொன்னது? என்றுன் ஆவேசமாக. அவனது ஆவேசம் சற்று பயத்தைக் கொடுத்தது அவளுக்கு. ஆத்திர மிகுதியினுல் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டாள். ஆனல் தன்மீது அத்தனை பாசம் வைத்திருக்கும் அருளை கேவலமாகப் பேச நாக் கூசிற்று. செய்வதறியாது திகைத்தாள். ''தங்கச்சி தயங்காமல் சொல்லம்மா'' என்று அருள் அன்பாகச் சொல்லுவதுபோல பிரமை ஏற்பட்டது. அதற்கேற்ப தாசனும் ''யார் அப்படிச் சொன்னது?'' என்று விடாமற் கேட்டுக்கொண்டேயிருந்தான். நிலைமையைச் சமாளிக்க எண்ணி ''அதைச் சொல்லி என்ன பயன்? உங்களுக்கு வரும் ஆத்திரத்தில் விபரீதங்கள்தான் விளையும். இதனுல் ஊர் சிரிக்குமளவுக்கு விஷயம் வெளிவந்துவிடும். என் துன்பம் என்மட்டில் ஒழியட்டும் விட்டு விடுங்க'' என்றுள். ''விட்டுவிட இது சாதாரண விஷயமல்ல. இந்த விஷயத்தை எந்த ஆண்மகனும் பொறுக்கமாட்டான். தவிர உன்னை அந்த அளவுக்குப் பேசியவனை நான் அறியத்தான் வேண்டும்; சொல் யாரவன்?'' என்றுன் மேலும் கோபமாக. அவனது ஆத்திரத்தைக் கண்டு பயந்த லில்லி 'சொல்வதில்லை' என்ற முடிவுடன் ''ஆத்திரப்படாதீங்க ஏதோ வாய்தவறிச் சொல்லிவிட்டேன், மன்னித்து மறந்துவிடுங்க'' என்று உண்மையாகவே மறுத்தாள். ''லில்லி.... என்று கத்திய தாசன் அவளை ஒருவிதமாகப் பார்த்துக்கொண்டு ''ஓகோ.... அப்படியானுல் நீ சொல்லமாட்டாய் அப்படித்தானே! இன்று வாய்தவறிச் சொல்லிவிட்டாய் அப்படித்தானே! எனக்கு காமுகன் என்று பட்டங் கட்டிவிட்டு அந்தப் போர்வைக்குள் நீ காதல் நாடகம் நடத்துகிருய் அப்படித்தானே! அது இன்று வாய்தவறி வெளிவந்து விட்டது.... இப்போது சொல்.... உண்மையைச் சொல்.... யாரவன்? ம்.... சொல் சீக்கிரம் யாரவன்'' என்று கண்சிவக்க அவள் மீது பாய்ந்தான். அவனது ஆவேசம் அவளை உலுக்கிவிட்டது. ''ஐயோ அத்தான்'' என்று அலறியவண்ணம் ''என்னைக் கொன்றுவிடுங்க ஆனல் இப்படி சித்திரவதை செய்யாதீங்க. நான் ஏழைதான். ஆனல் பண்பிழந்தவளல்ல. கணவனையே சதமென நம்பி வாழ்கிறேன். அத்தான் என்னை உங்கள் கையாலே கொல்லுங்க. ஆனல், என்னைத் தவறியவள் என்று மட்டும் சொல்லாதீங்க....'' என்று கதறியழுதாள். அவளது அழுகைக்கு செவிசாய்க்காது விறைப்பாக நின்ற தாசன் ''அப்படியானுல் நீ உன்னைக் கேவலமாகப் பேசியவன் யார் என்று சொல். நீ சொல்லாத வரையிலும் நான் எனது எண்ணத்தை மாற்றமுடியாது'' என்றுன். அவனுக்கு எந்தவித சமாதானமும் சொல்லி தப்பமுடியாது, வருவது வரட்டும், சொல்லிவிட வேண்டியதுதான். துணிவை வரவழைத்துக்கொண்டு, கடவுளை வேண்டிக்கொண்டு ''சொல்லுகிறேன்...., சொல்லுகிறேன் அத்தான். ஆனல் கலகம் ஏதும் செய்துவிடாதீர்கள்'' என்று கெஞ்சினுள். ''லில்லி வீண் கதையளக்காதே, கலகம் பிறந்தால்த்தான் நியாயம் பிறக்கும்; பயப்படாமல் சொல்லு'' என்றுன். திக்....திக்.... என அவள் மனத்துடன் கடியாரம் போட்டிபோட்டது. அழுகையை அடக்கிக்கொண்டு கரகரத்த குரலில் ''வேறு யாருமில்லை உங்கள் நண்பர் தான்'' என்றுள். ''யார் அருளா!'' என்றுன். ''ஆமாம். அடிக்கடி அவர் இங்கு வருவதும், அவரது பேச்சும், பார்வையும் எனக்குப் பிடிக்கவில்லை'' என்று சொல்லிவிட்டு அவனைப் பயத்துடன் நோக்கினுள். ''அருளா அப்படி நடந்தான்?.... நம்பமுடியவில்லையே'' என்று மீண்டும் அவளைச் சந்தேகத்துடன், ''லில்லி நீ சொல்லுவது.... உண்மைதானே?'' என்று கேட்டான். அதற்குமேல் அவளால் பேசமுடியவில்லை ''ஆம்'' என்று தலையாட்டிவிட்டு அழுதாள். ''அண்ணு.... அண்ணு....'' என்று மனம் துடித்தழுதது. ''அடப்பாவி.... நல்லவன்போல வேஷம் போட்டானே! துரோகி!'' மேசையின்மேல் ஓங்கிக் குத்தினுன். கணத்துக்குக்கணம் அவன் ஆவேசம் ஏறிக்கொண்டேயிருந்தது. லில்லி பயந்துபோய் செயலற்று நின்றுள். ''லில்லி நீ தவறுதலாகச் சொல்லவில்லையே?'' என்று மீண்டும் கேட்டான். அவள் நடுங்கிக்கொண்டு ''இல்லை'' என்று தலையாட்டினுள். ''எனக்கு நண்பன், அப்பாவுக்கு நல்ல பிள்ளை, இங்கு நயவஞ்சகப் பாவி'' என்று நறநறவென்று பற்களைக் கடித்தான். ''தொலைத்துவிடுகிறேன் அவனை'' என்று தாவி வெளியேற, ''அத்தான்'' என்று குறுக்கே பாய்ந்தாள் லில்லி. ''அத்தான் தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்க.... ஆத்திரப்படாதீங்க'' என்றவளை ''விலகிப்போ'' என்று தள்ளிவிட்டு, மாடிப்படிகளில் தடதடவென இறங்கினுன். அவன் தள்ளிய வேகத்தில் சுவருடன் மோதிக் கீழே விழுந்து, சிரமப்பட்டு எழுந்து ஓடினுள். அவளும் வாசலுக்கு வர அந்தப் பெரிய ஹம்பர் காரும் ஊர் என்று உறுமிக்கொண்டு வெளியேறச் சரியாக இருந்தது.

[வளரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# "மாறிவரும் உலகில் விசுவாசம்"

## விசுவாசத்தை பாதுகாத்தல், வளர்த்தல், செயற்படுத்தல், பரப்புதல்.

அண்மையில் கல்முனையில் நடந்த தி. ம. ம. மா. ஐ. சங்க வருடாந்த மகா நாட்டில் இவ்விடயமாக கருத்துரை வழங்கப் பட்டன; நீண்ட விவாதங்கள் நிகழ்ந்தன; தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. கிறிஸ்துவ உலகின் இன்றைய நிலையில் இது அத்தியா வசியமே.

மண்ணகமே மாற்றத்திற்குரியது. மண்ணகத்தை ஆக்கும் போதே இறைவன் அதனையும் அதனுளடங்கிய, அப்பாலுள்ள யாவற்றையுமே மாற்றத்திற்குரியனவாக ஆக்கிவிட்டார். இது இன்றும் நாம் கண் கூடாகக் காணும் உண்மை. மாற்றங்கள் ஏற்படுவதும், ஏற்படவேண்டியதும் இயல்பே என்பது தெளிவு. உலகின் எத்துறையிலும், சமூக, பொருளாதார, விஞ்ஞான, கல்வி, சுகாதார, சமயத்துறைகளில் மாற்றம் ஏற் பட்டு வந்திருக்கிறது; வருகிறது. எனவே, இனி மாற்றம் வரவேண்டியதும் நியதிதான்.

திருச்சபையின் ஆரம்ப காலத்திலிருந்தே நமது சமயத்திலும் எத்தனையோ மாற்றங் கள் ஏற்பட்டுள்ளன. இம்மாற்றங்களின் காரணமாக எற்பட்ட விளைவுகளை வரலாறு காட்டும். முன்னுள் திருச்சபைச் சங்கங்களால் ஆக்கப்பட்ட மாற்றங்களால் ஏற்பட்ட விளைவுகளையும் திருச்சபை வரலாறு எடுத்துக் காட்டுகிறது.

எதற்காக இம்மாற்றங்கள்? மனிதனின் நன்மைக்காகவே. மனிதன் இறைவனுல் தனக்களிக்கப்பட்ட அறிவைக் கொண்டு எவ் வகையிலும் முன்னேற முயலும் போதுதான் இம்மாற்றங்கள் மலிகின்றன. இம்மாற்றங் களினுல் இவ்வுலகின் பல துறைகளிலும் தீயவிளைவுகள் ஏற்பட்டதைப் போலவே, நம் திருச்சபையிலும் ஏற்பட்டது. பழைய காலத்தில் நீரோ, டயக்ளீசியன் போன்ற பேரரசர்கள் நம் சமயத்தையே அழித்துவிட அனைத்தையும் செய்தார்களே. லூதர், கல் வின் ஆதியோர் சீர்திருத்தச் சபைகளை ஏற் படுத்தினுர்களே; திருச்சபை அழிந்து விட் டதா? நாம் பயப்படத் தேவையில்லை. அழியமாட்டாது. அழிய முடியாது. வரலாறு ஒரு சான்று. "உன் பெயர் பாறை; இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட் டுவேன். நரகத்தின் வாசல்கள் அதனை வெற்றிகொள்ளா" (மத். 16: 18) என்பது இறைமகனின் அருள்வாக்கு.

இன்றைய நிலையில் நாம் செய்யவேண் டியதென்ன? விசுவாசம் நம்பமுடியாததை யும் நம்பச் செய்வதற்காக இறைவனுல் இனு மாக வழங்கப்பட்ட அருங்கொடை. இந்த அருங்கொடை அழிந்து விடுவதில்லை. ஆனுல் பற்பல ஏதுக்களால் இது மழுங்கிவிடுகிறது. எனவே இந்த ஏதுக்களை நாம் ஆராய வேண் டும். தீய ஏதுக்களை நீக்க முயலவேண்டும். பின் விசுவாசம் தானுக வளரும்; உறுதிப் படும்.

கிறிஸ்துவின் நற்செய்தி நூல்களை நாம் வாசிக்க வேண்டும். மற்றவர்களை வாசிக்கச் செய்யவேண்டும் என்ற வாதம் நல்லதுதான். இதுமட்டும் போதாது. நாம் உலகில் வாழ் பவர்கள்; உலக வாழ்வின் அடிப்படையில் இவற்றை நோக்கவேண்டும்.

தம் நற்செய்தியை உலகோர்க்கறிவிக்க விசேட வரங்களால் நிறைத்து அனுப்பப்பட் டவர்கள் குருமார். அன்று தொட்டு இன்று வரை இவர்களை உயர்ந்த ஸ்தானத்தில் வைத்தே மதிக்கிறோம். கிறிஸ்துவின் பிரதி நிதிகளாகவே இன்றும் கருதுகிறோம்; பணி கிறோம்; பின்பற்றுகிறோம். எனவே, தங் கட்கே உரிய உயர்ந்த ஸ்தானத்தின் உயரிய கடமைகள் அவர்கட்கு என்றும் உண்டு.

திருப்பலியையும், திருவருட்சாதனங்களை யும் நிறைவேற்றித் தம் மக்கட்கு இறைவ னின் திருவருட் கொடைகளைப் பெற்றுக் கொடுப்பது உன்னத செயல். ஆனுல் இத ஞல் மட்டும் சாதாரண மக்களின் விசுவா சத்தைப் பேணிவிட முடியாது. பொதுவாக இவர்கள் எப்படி வாழ்கிருர்கள் என்பதையே

[13ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அங்கி தரும் பெருமை - கோடித் தங்கம் தரினும் வருமோ?

திருக்கோணமலை
9-12-71.

அன்புள்ள தம்பி,

நலம். நலம் மலர்க. நீண்ட நாட்களுக் குப்பின் அண்ணு கடிதம் எழுதுகின்ருர் என எண்ணி ஆச்சரியமும் - அதிசயமும் கொள் வாய். திருமலை - மட்டுநகர் மறைமாவட்ட ஐக்கிய சங்க மகாநாட்டிற்காக கல்முனை சென்றுவந்த களைப்பும் - அலுப்பும் இன்னும் நீங்கவில்லை. எனினும் பொதுக்கூட்டத்தில் இடம்பெற்ற பல்வேறு பிரேரணைகளில் ஒன் ருன "குருமார் தங்கள் சீருடையாகிய அங்கி யணிந்து பொது இடங்களில் நடமாடவேண் டும்" என்ற பிரேரணைபற்றி குருமடத்தில் மாணவஞய்ப் பயிலும் உனக்கு கட்டாயம் எழுதவேண்டுமென எண்ணினேன். ஏனெ னில் சென்ற விடுமுறையின்போது அம்மாவுக் கும் உனக்கும் இவ்விடயத்தில் நடந்த கார சாரமான விவாதத்தில் நான் கலந்துகொள் ளாது ஒதுங்கி இருந்ததை மறந்திருக்கமாட் டாயல்லவா?.... "அம்மா இது முற்போக் கான காலம், காலத்திற்கேற்ப திருச்சபை யில் மாற்றங்கள் வருகின்றன; வந்துகொண் டிருக்கின்றன. 1971ஆம் ஆண்டிலும் இத் தகைய கர்நாடகப் பேர்வழியாக இருக்கி ருயே...." என அம்மாவை நீ அடக்க முயன் றும்,.... "என்னைப்பற்றி நீ என்னென்ருலும் சொல்லு. ஆனுல் குருமார் அங்கி அணிந்தே ஆகவேண்டுமென விடாப்பிடியாக நின்ற அம்மாவின் தோற்றம் இப்பொழுது என் மனக்கண்முன் வருகின்றது.

"பழையன கழிதலும், புதியன புகுத லும் வழுவலகால வகையின" என்பதற் கேற்ப 2ம் வத்திக்கான் சங்கத்தின்பின் ஏற் பட்ட மாற்றம் இது என நீ கூறினுலும் கூறுவாய். ஆனுல் ஒன்றை நினைவில் வைத் துக்கொள்; புதியன புகுதல் ஒழிய, **புகுத்தல் அல்லவே.** எந்த மாற்றமும் நமது உள்ளத் தைத் தூய்மைப்படுத்தி, இயேசுவின் பால் ஒன்றிக்கவைத்து ஆன்ம ஈடேற்றத்திற்கு உறுதுணையாக நிற்கவேண்டுமேயல்லாது, அர்த்தமற்ற சடங்குகளாகவும், வேடிக்கைக் காட்சிகளாகவும் மாறிவிடக்கூடாதல்லவா?

தம்பி,

"குருத்துவப்பணி புனிதமான, புண் ணியமான, புதுமையான ஒரு தெய்வீகப் பணி.கிறிஸ்துவுக்கு அடுத்தாற்போல் உயர்ந்து சிறந்து விளங்குவது குருத்துவம்தானே. பொது நிலையினரை இல்வுலகில் வாழ்வாங்கு வாழச்செய்து கிறிஸ்துவினண்டை அழைத் துச் செல்லும் இவ்வுயர்ந்த அந்தஸ்தைக் கண்டு வானதூதர்களே வாயடைத்துப் போகிருர்களாம். இத்தகைய உயர்ந்த உன் னத பதவி ஒரு சிலர் அங்கி அணியாததன் மூலம் உருக்குலைந்து போவதா?" எனப் பல ரும் காரசாரமாக அன்று விவாதித்தனர். துறவிகளின் பெருமையைக் கூறவந்த வள்ளு வர் "துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து இறந்தாரை எண்ணிக் கொண் டற்று" என்கிருர். துறவறத்தை மேற்கொண் டுள்ள நமது சமயக் குருமார்களிற் பலர் இல்லறவாசிகள் போன்று உடை அணிந்து கொண்டு "நான் ஒரு குருவானவர்" எனக் கூறித்திரிய வேண்டிய நிலை ஏற்பட்டு வரு வதைப் பற்றிச் சற்று சிந்தித்துப்பார். வெளித் தோற்றத்தைக் கொண்டே இவர் ஒரு குரு தான் என்று மக்கள் மதித்து - மதிப்பளித்த காலம் கடந்துவிட்டதென இவ்வங்கி அணி யாத குருமார் கருதுகின்ருர்களா?

அங்கி அணிவதைப்பற்றி தமிழ் நாட்டின் அருட்திரு தந்தையர் ஒருவர் கூறுவதின் ஒரு பகுதியைக் கீழே தருகிறேன்: "பொது மக்க ளைப் பொறுத்த மட்டில் சாதி, இன, மத வேறுபாடின்றி குருக்களுக்கு உயர்ந்த மதிப் புக்கொடுத்து வருகின்ருர்கள். ஏனெனில் குரு என்பவர் தன்னைத்தானே ஒரு இலட்சியத்திற் காகக் கையளித்தவர்; ஒழுக்கத்திலும், ஆன் மீகத் துறையிலும் தலைசிறந்தவர்; கண்ணி யத்துக்கும், தூய்மையான வாழ்க்கைக்கும் சின்னமாகத் திகழ்பவர். கடவுளின் பிரதிநிதி யாக இருப்பவர்; அவர் அணிந்திருக்கும் அங்கி ஆயிரக்கணக்கான மக்களிடையே அவ ருக்கு ஒரு உயர்வான தனி இடத்தைப் பெற்

(12ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அங்கி தரும் பெருமை...

[11ம் பக்கத் தொடர்ச்சி]

றுத் தருகின்றது.'' ஆம்; தம்பி ''**அங்கி தரும் பெருமை - கோடித் தங்கம் தரினும் வருமோ?**'' என்று நான் எங்கோ படித்த ஞாபகம் வருகின்றது. இது முற்றிலும் உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை என்பதை மறந்து விடாதே.

பிரேரணை விவாதத்திற்கு விடப்பட்ட பொழுது அருட்திரு தந்தையர் ஒருவர் தமக் கேற்பட்ட அநுபவத்தை எடுத்துக்கூறினர். அதனை உனக்கும் அறியத்தருகிறேன்.

''தனது பங்குக் கோயிலின் அறையில் தான் நீளக் காற்சட்டை அணிந்திருந்த பொழுது, வயது சென்ற கிழவி ஒருத்தி வந்து குருவானவரைப் பார்க்க வேண்டும் என்ரு ளாம். தான்தான் குருவானவர்எனப்பலமுறை எடுத்துச் சொன்ன பொழுதும் கிழவியோ நம்பவில்லை. தான் உள்ளே சென்று அங்கியை அணிந்து வந்த பொழுதும் இது யாருடை யதோ யார்கண்டது எனக்கூறித் தன்னைக் குருவென ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டா ளாம். எனவே அங்கி அணிந்தாலென்ன அணியாவிட்டாலென்ன'' என வினவினர். கிழவி செல்லும் பொழுதே அங்கியுடன் இருந் திருப்பாரானல் அக்கிழவி அவர் ஒரு குரு வென ஏற்றிருப்பாள் அல்லவா?

தம்பி, இதிலிருந்து என்ன தெரிகின்றது. ஒரு குருவானவர் தன் துறவுக்குரிய அங்கி யோடு இருக்கும் போதுதான் மக்கள் அவரை எளிதில் அடையலாம் கண்டு கொள்கிறார்கள்; அன்போடும் மரியாதையோடும் தந்தையே என நாடிப் போகின்றார்கள் என்பதைத் தானே .... மனித வாழ்க்கையின் பொழுது கிடைத்தற்கரிய உயர்ந்தபேறு குருத்துவமே. அக்குருத்துவ நிலையை உலகுக்கு எடுத்துக் காட்டி உலகில் வாழ் எல்லா மத இன மக் களும் ''தந்தையே'' எனப் பற்றும் பாசமும் கொள்ளச் செய்வது இங்வங்கியே. இதனை விடுத்து நீளக் காற்சட்டையும், சேட்டும் அணிந்து செல்லும் ஒருவரைக் கண்டால் நம் மதத்தில் உள்ளவர்கள் சொல்வதறியாது, செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். இவ்வதிர்ச்சியில் இருந்து நீங்க முதல் பிற சமயத்தைச் சார்ந்தவர்கள் ''என்ன குருத் துவ அந்தஸ்திலிருந்து இவர் வெளியேறி விட்டாரா? இப்பொழுது ''லோ'' போடக் காணமே'' என்று கேட்கும் பொழுது என்ன பதில் சொல்வதென்று புரியாமல் வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஊர் வாயை உலைமூடி கொண்டு மூட முடி யுமா?

இவ்விடயத்தில் அதிகம் எழுத யான் விரும்பவில்லை. உன் உள்ளத்திலும் நண்பர் கள் மனதிலும் இக்கடிதம் சில வேளைகளில் பல பிரச்சனைகளைத் தோற்றுவிக்கலாம்.

எனது கடிதத்திற்கு மாற்றுக்கடிதம் நீங் களனைவரும் சேர்ந்து எழுதலாம். அப்படி எழுதுவீர்களானல் பதிற் கடிதம் எழுதும் பொழுது கூட்டத்தில் இடம்பெற்ற ஏனைய விவாதங்கள் பற்றி விரிவாக எழுதுகிறேன். இன்னும் சில ஆண்டுகளில் அண்ணனுகிய நானே உன்னைத் தந்தையே என அழைக்கும் காலம் வரப்போகிறதல்லவா?

தம்பி,

கோவிலில் மட்டுமன்றி ஊரின் எந்த மூலைகளிலும், முடுக்குகளிலும், நாட்டின் பட் டிகளிலும் - தொட்டிகளிலும் பொது இடங் களிலும் பிரயாணம் செய்யும் போதும் மாற் றுக் குறையாத தங்கமெனக் குருமார் போற் றிப் புகழப்படவேண்டுமல்லவா? அவ்வாறு போற்றிப் புகழ அச்சாணியாக விளங்குவது அங்கிதான் என்பதை ஏனே சிலர் அறிந்தும் அறியாததுபோல் அங்கியின்றி நடமாடுகின் றூர்கள்.

தாயாகிய திருச்சபை ஒருவரைக் குரு வாகப் பெற்றதில் அடையும் மகிழ்விலும் பார்க்க, மக்கள் போற்றும்படி குருத்துவம் என்ற மாசற்ற விளக்கு மாசுபடாது ஒரு வரிடம் பிரகாசிக்கும் போதுதான் பேர் மகிழ் வும் பேருவகையும் கொள்வாள் என்பதை மனதில் வைத்துக் கொள்.

''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றேன் எனக் கேட்ட தாய்'' என வள்ளுவர் கூறுவது தாயாகிய திருச் சபைக்கும் பொருந்துமல்லவா?

இங்ஙனம்,

**அன்புள்ள அரியண்ணு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மாறிவரும் உலகில்...

[10ம் பக்கத் தொடர்ச்சி]

மக்கள் பார்க்கிறார்கள். இது நம் இயல்பு; கறைகாண்பதற்கல்ல; பின்பற்றுவதற்கே.

அறிவுரைகளை அழகாகப் பொழிந்து விட்டு, புத்துரையெல்லாம் புதியன புதியனவாகக் கூறிவிட்டு, தாம் அவ்வழி செல்லாமல், மறுவழி செல்லும் போது பாமர மகனின் விசுவாசம் என்ன செய்யும்! குருகுலத்தார், பொதுநிலையினரிலிருந்து பிரிந்த சமுதாயமாக வாழக்கூடாது; கலந்து வாழ வேண்டும்; இவ்வாழ்வால்தான் சமயப் பிரச்சினைகளுடன் சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கமுடியும் என்பது மறுக்க முடியாத உண்மை. வரவேற்க வேண்டியதே. ஆனால் இதற்காக குருகுலத்தார் தம் உயர்ந்த நிலையையும், பண்பையும், கடமைகளையும் மறந்து, தமக்களிக்கப்பட்ட சுதந்திரத்தையும் பிழையான வழியிற் செலுத்தி, அதேவேளை, தம் மக்களின் விசுவாசத்தைப் பேணவும் நினைத்தால் கதி என்னாகும்!

பொது நிலையினர் யாவரும் உயர்ந்த அறிவு படைத்தவர்களல்ல. ''சொல்வதைச் செய்; செய்வதைச் செய்யாதே'' ''அவர் தம் குற்றம் அவரோடு; நம் கடமை நமக்குண்டு'' என்ற கருத்துக்களைப் பின்பற்றி நடக்கக் கூடியவர்களல்ல. ''இப்படிச் சொல்கிறார்கள்; மறுவழி நடக்கிறார்கள்; நாமும் ஏன் அப்படி நடக்கக்கூடாது'' என்று எண்ணும் இயல்புடையவரே பெரும்பான்மையர். இச்சாதாரண, பாமர மகனின் மன அடிப்படையிலிருந்தே, குருகுலத்தார் தம்மைக் கணித்து, அதற்கியைய தம் நடை, உடை, பாவனைகளில் நடந்து, வாழ்ந்து காட்டுவதே, விசுவாசத்தைப் பேண அதிசிறந்த வழி.

அப்போஸ்தல பணிக் குழுக்களை வழி நடத்தும், பொது நிலையினர்க்கும் இந் நிலை மிகமிகப் பொருந்தும்.

விசுவாசத்தைத் தளரச் செய்யும் ஏதுக்கள் இன்னும் மிகப் பல உண்டு. தவறான உணர்வை ஊட்டும் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், படக்காட்சிகள், சொற்பொழிவுகள், விமர்சனங்கள் ஆதியவற்றைத் தவிர்த்து நடக்கப் படிப்படியாக ஆய்ந்தறிந்த வழிகளைக் கையாள வேண்டும். இளைஞர் நிறுவனங்களை ஆக்கி, ஆழ்ந்த அநுபவம் வாய்ந்த அறிஞர்களைக் கொண்டு அவற்றை நன்முறையில் இயக்கி, இந்த இளைஞர் மன்றங்கள் மூலம் பெரும் கருமங்களைச் சாதிக்க முடியும்.

கிறிஸ்துவின் நற்செய்தி ஆதாரமாகக் கொண்டு, குருமரபினரும், பொது நிலையினரும் ஒன்றுபட்டு, ஒருவர்க்கொருவர் உறுதுணையாக நல்வாழ்வு வாழ்ந்து, மேற்காட்டியது போன்ற ஏனைய சிறந்த வழிகளையும் கையாள்வதின் மூலமே நம் விசுவாசத்தைப் பாதுகாக்கமுடியும்; வளர்க்கமுடியும்; செயற்படுத்தமுடியும்; பரப்பமுடியும்.

''ஸ்வர்ணா''

## இறைவழிபாட்டுச்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

படைப் போதனைகளுள் சேர்த்துள்ளது. கைகளை இவ்வாறு விரித்தலை கத்தோலிக்க திருச்சபை உறுதிப்பூசுதல் திருவருட் சாதனத்தின் ஆரம்பமென்று கருதிவந்துள்ளது. இதனால் பெந்தெக்கொஸ்தின் அருள் ஒரு விதத்தில் திருச்சபையில் நீடித்து வருகின்றது.

பரிசுத்த ஆவியாகிய கொடையை விசுவாசிகளுக்கு அளிக்கும் திருச்சடங்கு பழைய காலத்திலிருந்தே வெவ்வேறு முறைகளில் நடைபெற்று வந்துள்ளது. கிழக்கிலும் மேற்கிலும் இச் சடங்கில் பற்பல மாற்றங்கள் ஏற்பட்டு வந்தன. ஆனால், இத் திருச்சடங்கின் மையப் பொருளாகிய பரிசுத்த ஆவியை அளித்தலில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

பல கீழ்நாட்டு ரீதிகளில் பரிசுத்த ஆவியை அளிப்பதற்கு ஞானஸ்நானத்திலிருந்து தெளிவாகப் பிரிக்கப்படாத, எண்ணெய்யாற் பூசும் ஒரு திருச்சடங்கு பழைய காலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்டு வந்தது. பெரும்பாலான கீழ்நாட்டுத் திருச்சபைகளில் இத்தகைய திருச்சடங்கு இன்றும் இருந்து வருகின்றது. அதாவது, ஞானஸ்நானம் கொடுக்கும் போதே, வளர்ந்தவர்களுக்கு மட்டுமல்ல, குழந்தைகளுக்குங்கூட உறுதிப்பூசுதல் அளிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர் மன்றம்

## கிறிஸ்தவ போதக வழிகாட்டி

அலகு: 7: திருச்சபை ஆற்றும் அலுவல்.
பாடம் 23: திருச்சபை நற்செய்தியை மக்களுக்கு அறிவித்துப் போதிக்கின்றது.

இப்பாடம் க. தி. வி. 50ம் பாடமாகும்.

**சிந்தித்துப்பார்: விடைகள்:**

1. திருச்சபை ஞான உரைகள், பாடல்கள், திருவழிபாடு வழியாக நமக்குப் போதிக்கின்றது.

2. கிறிஸ்துவின் திருமொழியைத்தான் திருச்சபை நமக்கு அறிவிக்கின்றது. ஆதலால், கிறிஸ்துநாதர்தான் திருச்சபை வாயிலாக நம்மிடம் பேசுகிறுர்.

3. ''உன் விசுவாசம் தளராதபடி உனக்காக வேண்டிக்கொண்டேன். நீ ஒரு முறை மனந்திரும்பிய பின் உன் சகோதரரை உறுதிப்படுத்து'' என்று இயேசு இராயப்பருக்குக் கூறினர். அதனல் அவர் திருச்சபையின் தலைமைப் போதகர்.

4. மேற்றிராணியார் ஞான உபதேச நூல் வழியாகவும் ஞான உரைகளாலும், தம் மக்களுக்கு எழுதி அனுப்பும் திரு நிருபங்களாலும் போதிக்கிருர்.

5. திருமறை உண்மைகளை மற்றவர்களுக்கு அறிவுறுத்த சிறப்பாக பெற்ருேர், ஆசிரியர், வேதியர் அழைக்கப்பட்டுள்ளனர்.

**பயிற்சிகள்:**

'ஆ' பிரிவிலுள்ளவைகளை 'அ' பிரிவிலுள்ளவைகளோடு பொருத்துக.

| (அ) | (ஆ) |
|---|---|
| 1. கிறிஸ்துவின் நற்செய்தியை நாம் அறியும் வழி | 1. திருச்சபை மூலம் |
| 2. திருச்சபை உண்மைகளை அறிய உதவுவது | 2. பரிசுத்த ஆவியினுல் |
| 3. கிறிஸ்துநாதர் நம்மிடம் பேசுவது | 3. வேதாகமம் |
| 4. திருச்சபை ஒளி பெறுவது | 4. திருச்சபையின் தலைமைப் போதகர் |
| 5. பாப்பாண்டவர் | 5. பாடல்கள், ஞானஉரைகள் திருமுகங்கள் |

பாடம் 24: திருச்சபை கடவுள் வழிபாட்டை நிகழ்த்துகிறது.

இப்பாடம் க. தி. வி. 53ம் பாடமாகும்.

**சிந்தித்துப்பார்: விடைகள்:**

1. திருச்சபை, திருவழிபாட்டில் நிகழ்த்துவன:

(i) கடவுளைப் புகழ்கின்றது.
(ii) நன்றி கூறுகின்றது.
(iii) பாவங்களுக்காகப் பரிகாரம் செய்கின்றது.
(iv) கொடைகளைப் பெற மன்ருடுகின்றது.

2. திருச்சபையின் திருவழிபாட்டின் பொழுது கிறிஸ்துவே எம்மத்தியில் இருக்கிருர் என்பதை உணர்ந்து சங்கை மரியாதையுடன் ஒழுகவேண்டும்.

3. திருச்சபை நம் ஆண்டவராகிய கிறிஸ்துவின் வழியாக கடவுளை மன்ருடுகின்றது.

4. திருச்சபையின் திருவழிபாட்டின் வழியாக நமக்கு அருட்கொடைகள் அளிக்கப்படுகின்றன.

**பயிற்சிகள்:**

சரியான சொல்லைத் தெரிந்து விடுபட்ட இடத்தை நிரப்புக:

1. திருச்சபையின் திருவழிபாட்டின் மையமாக இருப்பது..............................
(பிரசங்கம், பூசைப்பலி, ஆசீர்வாதம்)

2. நாம் .................................. வழியாக கடவுளை மன்ருடுகிருேம்.
(கிறிஸ்து, புனித சின்னப்பர், இராயப்பர்)

(15ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## புனித தோமையாரைப்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

''என்னைக் கண்டதால் விசுவாசம் கொண்டாய், காணுமலே விசுவசிப்பவர்கள் பேறுபெற்ருேர்'' என்ருர்.

சில நாட்களுக்குப் பின் திபேரியாக் கடற்கரையில் இயேசு அப்போஸ்தலர்களுக்குக் காட்சியளித்தார், அப்போது தோமையாரும் அவர்களோடு இருந்தார்.

''பின்னர் இயேசு சீடருக்குத் திபேரியாக் கடலருகே மீண்டும் தோன்றினுர்; தோன்றியது இவ்வாறு சீமோன் இராயப்பர், திதிமு என்ற தோமையார் ................... செபதேயுவின் மக்கள், இயேசுவின் சீடர்களுள் வேறு இருவர் ஆகிய இவர்கள் கூடியிருந்தார்கள்'' (அருளப்பர் 21: 2).

விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரமும் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள்'' என்று தம் சீடர் குழாமுக்கு ஆணை கொடுத்தபோது புனித தோமையாரும் அப்போஸ்தலர்களோடு இருந்தார். இயேசுவின் அன்புக் கட்டளையைச் சிந்தையில் தாங்கிக் கொண்டார்; புறப்பட்டார் உலகம் என்னும் களம் நோக்கி மறவர் தோமையார். ★

## கத்தோலிக்க விசுவாசத்...

[7ம் பக்கத் தொடர்ச்சி]

இந்த விசுவாசத்தை இறைவன் நமக்கு ஞானஸ்நானத்தின் வழியாகத் தருகின்ருர். அதைப் பாதுகாத்து உறுதிப்படுத்துதல் நமது பொறுப்பாகும். ''ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவைப் பெற்றுக்கொண்டதற்கு ஏற்ப, அவரோடு ஒன்றித்து நடந்து வாருங்கள். அவரில் வேரூன்றி, அவர்மீது உங்கள் வாழ்க்கையாகிய கட்டடத்தை எழுப்புங்கள். உங்களுக்குப் போதித்தவாறு, விசுவாசத்தில் உறுதிபெற்று நன்றி மிக்கவர்களாய்த் திகழுங்கள்'' (கொலோ. 2, 6—7) என்று புனித சின்னப்பர் புத்திமதி கூறுகின்ருர்.

அடுத்ததாக, 'விசுவாசம்' என்னும் பதம் நமது திருமறையைக் குறிக்கின்றது. கத்தோலிக்க திருமறை இறைவன் வெளிப்படுத்திய உண்மைகளை மட்டுமல்ல, கிறிஸ்து நாதர் அளிக்கும் அருள் வாழ்வையும், அவ் வாழ்விற்குரிய சட்டதிட்டங்களையும் தன்னுள் அடக்கியுள்ளது. ஆகவே, விசுவாசத்தை நாம் வாழ்ந்து காட்டவேண்டும் என்றும், அதைப் பிறர் மத்தியில் பரப்ப வேண்டும் என்றும் சொல்லும் போது 'விசுவாசம்' திருமறையையே குறிக்கின்றது. ★

## சமூக சேவை நிலையம், திருமலை

திருக்கோணமலை சமூக சேவை நிலையத்தில் ஓரங்கமான கத்தோலிக்கக் கழகம், ஆண்டு தோறும் நடாத்தும் நத்தார் சங்கீதக் கூட்டுக்குழுக்களுக்கான போட்டி, வழமைபோல் இவ்வாண்டும் இரண்டாவது தடவையாகக் கடந்த 12—12—1971 காலை 10—30 மணிக்குத் துரைரத்தினம் அரங்கில் நடைபெற்றது.

பரி. மரியநாயகி பேராலயப் பங்குத் தந்தை வண. வம்பேக் அடிகளார் தலைமையில் நடைபெற்ற மேற்படி போட்டியில் மூதூர் புனித அந்தோனியார் சங்கீத அணி, திருக்கோணமலை புனித சூசையப்பர் ரோ. க. விடுதி மாணவிகள், நிலாவெளி புனித வளனுர் சங்கீதக்குழு ஆகியன பங்குபற்றி முறையே 79, 78, 64 புள்ளிகள் பெற்று, முதலாம் இடத்தை மூதூர் புனித அந்தோனியார் சங்கீத அணியும், இரண்டாம் இடத்தைப் புனித சூசையப்பர் ரோ. க. விடுதி மாணவிகளும், மூன்ரும் இடத்தை நிலாவெளி புனித வளனுர் சங்கீதக்குழுவும் பெற்றன. வண. வம்பேக் அடிகளார் வெற்றி பெற்ற மேற்படி சங்கீதக் குழுக்களுக்குப் பரிசுகள் வழங்கினுர்.

**அருட்திரு. எஸ். அருள்குணஞானம்.**

## மாணவர் மன்றம்...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

3. ஆதிக் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறையைப் பற்றி..................................... ஆகமத்தில் வாசிக்கிரேும்.

(ஞானகமம், அப்போஸ்தலர் பணி, யாத்திரையாகமம்)

4. பீடத்தில் நிற்கும் குரு........................ ........... பிரதிநிதியே.

(மாதாவின், கிறிஸ்துவின், புனிதர்களின்)

5. திருச்சபையின் தலைமைக்குரு........... ......................

(இராயப்பர், கிறிஸ்துநாதர், அருளப்பர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# "உன்னையே உணர்"

## இதுதான் கிறிஸ்து தரும் நற்செய்தி.

— சங். சகோ. S. A. I. மத்தியு. ச.சு.ச. —

கிரேக்க நாட்டில் பசுமையான ஒரு சமவெளி உண்டு. அச்சமவெளிக்கு 1000 அடி உயரத்தில் ஒரு குன்று. குன்றிலே ஒரு கோவில் — அப்போலோ தெய்வத்தின் ஆலயம் — இது இரண்டாயிரத்து ஐந்நூறு வருடம் பழமையானது. இந்த ஆலயத்திலே பளிங்குக் கல்லிலே பொறிக்கப்பட்ட இரண்டு வார்த்தைகள் - இரண்டே இரண்டு வார்த்தைகள் - என்றென்றும் ஜீவகளையுள்ள வார்த்தைகள் - கிரேக்கரின் சிந்தனையைக் கிளறிய வார்த்தைகள் — சோக்கிரட்டீஸின் அறிவை ஆழமாக்கிய வார்த்தைகள் - இன்னும் எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் வார்த்தைகள் - பொறிக்கப்பட்டிருக்கின்றன.

கிரேக்கர்கள் உலக நாகரீக வரலாற்றில் உயர்ந்தோங்கி நிற்கிறார்கள் என்றால், வான சாஸ்திரம், பௌதிக சாஸ்திரம், மருத்துவம், சத்திர சிகிச்சை, கணிதம், அரசியல் ஆகிய துறைகளிலே உலகத்திற்கு வழிகாட்டிகளாக விளங்கினார்கள் என்றால், அவர்கள் ஒரு சிந்திக்கும் சமுதாயமாக விளங்கினார்கள், அவர்கள் எதைப்பற்றி சிந்தித்தார்கள்? தம்மைப் பற்றிச் சிந்தித்தார்கள். அப்படிச் சிந்திக்கச் செய்தது அந்த இரண்டு வார்த்தைகள். (மனிதனே) "**உன்னையே உணர்**" (Know Thyself) என்ற வார்த்தைகள்.

மனிதன் தன்னைத்தானே உணர வேண்டும். தனக்கு இருக்கும் திறமைகளை உணர வேண்டும். கடவுள் தனக்குத் தந்த '**தாலந்துகளை**' உணர வேண்டும். அவை சமுதாயத்துக்குப் பயன் படும்படிச் செய்யவேண்டும். சமுதாயத்தை உயர்த்த வேண்டும் அதிலுள்ள கறைகளைக் கழுவவேண்டும். இவற்றை யார் செய்வது? நீதான் செய்யவேண்டும். இந்தக் கட்டுரையை வாசிக்கும் ஒவ்வொருவரும் செய்யவேண்டும்.

கிறிஸ்துவின் பிறப்பை கோலாகலமாகக் கொண்டாடிய நாம், கிறிஸ்து எதற்காக வந்தார் என்று சிந்திக்க வேண்டும். கிறிஸ்து ஒரு சமுதாயச் சிற்பி. மாபெருந் தலைவராக விளங்கினார். தானே செய்து காட்டினார். வாழ்ந்து காட்டினார். சமுதாயக் கறைகளைக் கழுவினார். சாட்டையால் அடித்து அவற்றில் சிலவற்றை அகற்றினார். அதற்கான பரிசையும் பெற்றார். காறி உமிழப்பட்டார். ஏன் உயிரையே இழந்தார்.

இறைவன் இயேசு இறையரசை அறிவிக்க வந்தார். அதற்காகத்தான் நாமும் அழைக்கப்பட்டிருக்கின்றோம். நம்மையே நாம் உணர்வோம். ஒவ்வொருவரும் இதை உணரின் இவ்வுலகை மாற்றிடலாம் - நல்ல மனமுள்ளவர்களுக்கெல்லாம் சமாதானம் உண்டாகிவிடும் எனின், எல்லோரையும் நல்ல மனமுடையவர்களாக்குவோம்.

நீயும் இறைமகன் அல்லவா? இதுதானே கிறிஸ்து கொணர்ந்த நல்ல செய்தி.

எல்லோரும் இன்புற்றிருக்க நீ என்ன செய்யப் போகிறாய்? .... ....

### தொண்டன் விநியோகஸ்தர்கள் கவனிக்கவும்.

தொண்டன் விநியோகஸ்தர்கள் தொண்டனுக்குச் செலுத்தவேண்டிய பணத்தைப் பின்வரும் முகவரிக்குத் தாமதமின்றி அனுப்பிவைக்கவும். தொண்டனைத் தொடர்ந்து பிரசுரிப்பதற்கு உங்கள் ஒத்துழைப்பு மிகவும் வேண்டப்படுகிறது. **தொண்டன் நிர்வாகி**, ஆயர் இல்லம், மட்டக்களப்பு.

இப்பிரசுரம் மட்டக்களப்பு 18, மத்திய வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில், மனேஜர் யோசேப் B. மறே S.S. J. அவர்களால் அச்சிடப்பட்டு, மகா வந். தியோகுப்பிள்ளை, துணை ஆயர், மட்டக்களப்பு. அவர்களால் 1–1–72ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media